Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 39

## கலித்தொகையில் தொழிற்பெயர்கள்

***முனைவர் ரா. பிரபா***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,*
*புனல்குளம், புதுக்கோட்டை.*
*மின்னஞ்சல்: prapasairam@gmail.com*

## முன்னுரை

இலக்கணச்சொல் வகைகள் நான்கனுள் முதலில் தோன்றுவது பெயர்ச்சொல். இப்பெயர்ச்சொல் வகைகளில் ஒன்று வினைப்பெயர்கள் (drived nouns). தமிழில் பெயர்கள் பெரும்பாலும் வினைச் சொற்களிலிருந்தே தோன்றுகின்றன. பெயர், வினை ஆகியவற்றின் இயல்பை ஒருங்கே பெற்று வருவனவற்றை தொழிற்பெயர் எனவும், வினையாலணையும் பெயர் எனவும் குறிப்பர். இவை, ஆக்கப்பெயரில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. இத்தொழிற் பெயர்கள் வினையிலிருந்து விகுதிகளைப் பெற்று தோன்றுவதால் இவ்வியல்பினைப் பெற்றது.

'தொழில் நிகழ்தலை உணர்த்தாது தொழிலையே இன்னதென்று உணர்த்துவது தொழிற்பெயர் ஆகும் என்கிறார்' (மு.வரதராசனார் மொழிநூல், பக்.223, 1947).

இப்பெயர்கள் காலம் உணர்த்தும் தொழிற்பெயர், காலம் உணர்த்தாத தொழிற்பெயர் எனவும் பிரியும்.

வினையடி + தொழிற்பெயர் விகுதி = காலம் காட்டும் தொழிற்பெயர் (வருதல், போதல், கொடுத்தல்)

வினையடி + காலம் / எதிர்மறை + அது + மை = காலம் காட்டாத் தொழிற்பெயர் (வருவது, வருகின்றது, உணராமை, செய்யாமை)

இவ்விலக்கண விதிகளைக் கொண்டு சங்க இலக்கியமான கலித்தொகையில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயர்களைப் பற்றி ஆய்வுக்கு உட்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியத்தில் கலித்தொகை

கலி + தொகை = கலித்தொகை. சங்க இலக்கியங்கள் அனைத்தும் தொகுப்பெற்ற நூல்கள். அப்பெயர்க்காரணத்திற்கேற்ப 'தொகை' என்ற பெயரில் அமைந்த இருநூல்கள் குறுந்தொகை, கலித்தொகை என்பனவாம். இந்நூலுக்கு மேலும் ஒரு சிறப்பு, செய்யுள் வழக்கால் பெயர்பெற்ற நூலாகும். இதனை தொல்காப்பியம்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல்சான்ற புலனெறி வழக்கினும்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்
- (தொல்.999)

கலித்தொகையோடு சேர்ந்து, பரிபாடலும் செய்யுளால் சிறப்புற்ற நூலாகும். இவ்விரு நூல்கள் தவிர மற்ற அனைத்தும் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டவை. இக்கலித்தொகைப் பாடல்கள் கலிப்பாவின் உறுப்புக்களான தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகியவற்றையும், ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சக கலிப்பா போன்றவற்றையும் கொண்டுள்ளன. மேலும சில இலக்கண உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது.

## ஆசிரியரும் அமைப்பும்

கலித்தொகை அனைத்தும் ஒருவராலேயே இயற்றப்பட்டது எனவும், பொதுவாக கலித்தொகை அனைத்தும் ஊன்றிப் படிப்பின் மொழிநடையிலும் பிறவற்றிலும் ஓர் ஒற்றுமையை காணமுடியும் என்பது அறிஞர்களின் கருத்து. (ச. அகத்தியலிங்கம், சங்கத்தமிழ் - 1, 1983, ப.118).

ஆனால் பாடல்கள் அனைத்தையும் ஒருவரே பாடியுள்ளனர் என தாமோதரம் பிள்ளை, சிவராசப்பிள்ளை, வையாபுரிப்பிள்ளை, இராசமாணிக்கனார் போன்றவர்கள் கருதுகின்றனர் என்றும், கிடைத்த ஏட்டுப் பிரதிகள் ஒன்றிலாவது ஆசிரியர்கள் பெயர்கள் கல்லாமையின் முடிவுக்கு வந்தனர் என்று கூறுகிறார் ச. அகத்தியலிங்கம் (ச.அகத்தியலிங்கம், சங்கத்தமிழ் - 1, 1983, ப.119).

ஆனால், திருநெல்வேலியைச் சேர்ந்த சொர்ணம் பிள்ளை,

'பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருனின் நாகன் மருதம் - அருஞ்சோழ
னன்லூர் திரள்முல்லை நல்லந்துவன் நெய்தல்
இல்விவலார் கண்ட கலி

என்ற பாடலைக் காட்டி கலித்தொகை பாடியவர்கள் ஐவர் என்று குறிப்பிடுகிறார்.




இப்பாடல்கள் 11 அடிகள் முதல் 80 அடிகள் வரை அடி வரையறை உள்ளன. கலித்தொகைப் பாடல்கள் அனைத்தும் கருத்துவளம் மிக்கதாகவும், தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி அறிவதற்கும், அப்பாடல்களில் பெரிதும் உயர்ந்தோல் காதலும், தாழ்ந்தோர் காதலும் பேசுகின்ற நூல் கலித்தொகையாகும். இவ்வியல்பினைக் கொண்ட நூலில் இலக்கண அடிப்படையில் ஆராயும்போது

பிற சங்க இலக்கியங்களைவிட சற்று மாறுபட்டுள்ளது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

## கலித்தொகையில் தொழிற்பெயர்கள்

முழுமையாக 150 பாடல்களைக் கொண்ட இவ்விலக்கியத்தில் ஐவகைத் திணைக்கேற்றார்போல, ஐவகை கலி என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. கலித்தொகைப் பற்றிக் குறிப்பிட்டபோது அது நின் பழந்தமிழ் நூல்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும், இந்நூல் சங்க இலக்கியங்களிலும் மற்ற இலக்கியங்களில் மொழிநடை இருந்து மாறுபட்டது என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மொழியியலாளர்கள் நிபந்தனை எச்சம், இரட்டைப் பன்மைச் சொற்கள், செய்யாத, செய்யாமல் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் போன்ற சொற்களும் இடம்பெற்றுள்ளன என்கின்றனர். இதனைப்போன்றே தொழிற்பெயர்ச் சொற்களும் 'செய்வது' என்னும் அஃறிணை விகுதிப்பெற்ற வாய்ப்பாட்டு தொழிற்பெயர்ச்சொற்களாகப் பயின்று வந்துள்ளன.

## குறிஞ்சிக் கலி

இப்பகுதியில் தோழி தலைமகட்கு, தலைவியின் நிலைக் குறித்து எடுத்துக் கூறி அவர்களின் வரைவுக்குறித்து எடுத்துக்கூறியதாக அமைந்துள்ளது.

மின் வரு தளிஅன்ன, மெலிவுவந்து உரைப்பதால் - (48-19)
புரப்பான் போவ்தோர் மதுரையும் உடையாகக் - (48-19)
ஒறுப்பின், யாம் ஒறுப்பது நமரை; யான் - (58-20)
ஏஎ! எல்லா! மொழிவது கண்டை, - (64-8)
தராமல் காப்பதோர் திறன் உண்டேல் - (38-13)
தீங்கதிர் விட்டது போல, முகன் அமர்ந்து, - (56-5)
நீதின்மேல் கொள்வது; எவன்? - (60-14)

மேற்கண்ட பாடல்வரிகளில் உரைப்பது, போல்வது, ஒறுப்பது, மொழிவது, காப்பது, விட்டது, கொள்வது போன்ற ஏழு இடங்களில் தொழிற்பெயர் தனக்கு இடம் பெயர்களை பயின்று வந்துள்ளது.

## பாலைக்கலி

தலைவியைப் பிரியும் தலைவனைப் பார்த்த தோழி அவளைப் பிரியும் நாள் எந்நாளோ, அந்நாள் இவள் உயிர் பிரியும் என்பதனை நீ அறியவில்லையா என்றாள்.

*இனிய சொல்லி, இன்னாங்கும் பெயர்ப்பு* - *(14-8)*
*எந்நாளோ, நெடுந்தாய் நீ செல்வது* - *(5-18)*
*இவட்கே, செய்தவறு மண்டிலம் மையொப்பது போல்* - *(7-7)*
*வசைதீர்ந்த என்நலம் வாடுவது அருநவார்* - *(26-14)*

பெயர்ப்பது, செல்வது, யாப்பது, வருவது போன்ற சொற்கள் தொழிற்பெயர் வடிவில் அமைந்துள்ளது.

## மருதக்கலி

மருதநிலத் தலைவன் பரத்தையரிடம் சென்று விட்டு வரும்போது ஊடல் கொள்ளும் தலைவியின் கூற்றாக பெரும்பாலான பாடல்கள் பாடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| புகழ்வது | (100-8) | சினவுவது | (91-6) |
| புலப்பது | (97-2) | தங்கியது | (83-24) |
| பொய்ப்பது | (97-21) | | |
| குதித்தது | (90-12) | தணந்தது | (66-17) |
| முற்றியது | (67-13) | நனைந்தது | (99-8) |
| மொழிவது | (98-12,33) | நிறைவது | (92-20) |
| கொள்வது | (71-16) | நின்றது(66-14) | |

ஐவகைத் திணைகளிலும் மருதக்கலி பாடல்களில்தான் அதிகமான தொழிற்பெயர்கள் விரவி வந்துள்ளன.

## முல்லைக்கலி

தோழி தலைவிக்கு ஏறுதழுவுதலைச் சுட்டிக் காட்டுதலும், அவற்றை ஊராரும், சுற்றத்தாரும் கண்டு நின்று கூறியதாகவும் இத்திணையில் அமைந்துள்ள பாடல்கள் அமைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| குலைப்பது | (100-17,23,29) | | |
| கொடுப்பது | (105-67) | பொடிவது | (105-59) |
| | (108-31) | முடித்தது | (107-10) |
| செல்வதும் | (108-32) | மேய்கிறது | (108-33) |
| தேறுவது | (113-2) | வருவது | (114-10) |
| பாட்டது(105-58) | | | |

ஆகிய பத்து இடங்களில் முல்லைத்திணைப் பாடல்களில் நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் என்ற மூன்று நிலைகளில் தொழிலை உணர்த்தி நிற்கின்றன.

## நெய்தற்கலி

நெய்தல் நிலத் தலைவனின் பிரிவிடையாற்றாத தலைவி, தன் தோழியைக் கண்டு புலம்பித் தவிர்ப்பது போன்று தொடங்குகிறது. இதனுள்,

| | | | |
|---|---|---|---|
| படுவது | (138-8,9,10,11,12,13) | | |
| காண்பது | (119-4, 134-5) | கொள்வது | (145-26) |
| காவாதது | (143-55) | | |

போன்ற அடிகளில் தொழிற்பெயர்கள் இடம்பெற்றுள்ளது.

இலக்கணிகளால் வரையறுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் ‘அது’ என்ற விகுதியினை வினையோடுப் பெற்று தொழிற்பெயர்கள் கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

தன்மை, முன்னிலை, படர்க்கை போன்ற மூன்று இடங்களிலும், முக்காலங்களிலும் உயர்திணைப் பெயராக இயம்பக்கூடிய சொறக்ள அஃறிணை ஈறு கொண்டு முடிந்துள்ளது.

சில தொழிற்பெயர்கள் காலம் காட்டியும் மற்றவை காலம் காட்டாமலும் கூறப்பட்டுள்ளது. அகத்திணை இலக்கியமான கலித்தொகையில் உயர்திணை உரையாடல்கள் நிகழக்கூடியக் கருத்தாவைக் கொண்டு எழுதப்பட்டுள்ள பாடல்களில் ‘அது’ என்ற மற்றும் ‘து’ என்ற விகுதியினைக் கொண்டு முடிந்துள்ள தொழிற்பெயர்கள், பிற இலக்கியங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது.

இப்பாடல்களைப் பாடிய புலவர்களால் பாடப்பட்ட பிற பாடல்களில் இப்பண்பினை காணமுடிவதில்லை என்கிறார். *(ச.அகத்தியலிங்கம், சங்கத்தமிழ் - 1, 1983).*

# தொகுப்புரை

தமிழில் தொன்மை இலக்கணமான தொல்காப்பியம் தொழிற்பெயர்கள் குறித்து நேரடியான இலக்கணத்தைச் சுட்டாத போதும், புள்ளி மயங்கியலில் ஏகாரத்துப் புணர்ச்சியினை விளக்கும்போது 'ஏசாரரை ஏற்றிய தொழிற்பெயர் முன்னர் (தொல்.எழுத்து.296) என்னும் சூத்திரத்தின் வாயிலாக விளக்கியுள்ளார்.

- 'அது' 'து' என்ற ஈறு, வினையோடு, காலம் உணர்த்தியும், உணர்த்தாமலும் கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.
- தொழிறபெயர்கள் வேற்றுமை உருபை ஏற்காது என்பது பெயர்வகள் வேற்றுமை உருபினை ஏற்று, காலம் காட்டாது என்பதற்கு எதிர்மறையான ஒன்றாகும். ஆனால் 'அது' என்பதனையே வேற்றுமை உருவாகக் கொள்ளும்போது தொழிற்பெயர்கள் வேற்றுமை உருபினை ஏற்றே கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது.
- பெரும்பாலான தொழிற்பெயர்கள் படர்க்கை இடத்திற்கு உரியனவாகவே கலித்தொகையில் இசைந்துள்ளது.
- சங்க இலக்கியங்களில் கலித்தொகையில் அதிகமான தொழிற்பெயர் இடம்பிடித்துள்ளன. அதனோடு இணையான வினையாலனையும்பெயரும் பயின்று வந்துள்ளன.
- 'அது' 'எது' என்பன விகுதியாகவும், ஈறாகவும், வேற்றுமை உருவாகபும், இப்பாடல்களில் பயின்று வந்து தொழிற்பெயர்களை உணர்த்துகின்றன.

# துணைநூற்பட்டியல்


1. அகத்தியலிங்கம் (1983), சங்கத் தமிழ் தொகுதி - 1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.
2. அகத்தியலிங்கம், ச., சொல்லியல் - 1, பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியிற் கழகம், அண்ணாமலை நகர்.
3. இசரயேல், மோ. (1976), இலக்கண ஆய்வு பெயர்ச்சொல் சிந்தாமணி வெளியீடு, மதுரை.
4. இளம்பூரணர் (1964) தொல்காப்பிய உரை எழுத்ததிகாரம் கழக வெளியீடு சென்னை.

5. சங்கர நாராயணன், கி. (2014), இலக்கண உருவாக்கத்தில் தொழிற்பெயர்கள் ஆய்வுக்கட்டுரை.
6. சுப்பிரமணியன், ச.வே. (2010) சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் உரையும் தொகுதி - 2 மணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.
7. வரதராசனார், மு. (1947) மொழி நூல் கழக வெளியீடு சென்னை.